# கலாதீபம்

කලාදීබම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.06.2023 – 30.06.2023 தீபம் 13





## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டுவிழாவினை மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடக்கி வைத்தார்






கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு ஆரம்ப விழா 16.06.2023 அன்று காலை 7 மணி முதல் ஆசிரிய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் கலாசாலையின் முன்றிலிலும், ரதிலக்சுமி மண்டபத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடல் தொழில் அமைச்சரும், யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவருமாகிய டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்ததுடன் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கலாசாலை முன் வாயிலில் வடிவமைக்கப்பட்ட நூற்றாண்டு நினைவுச் சின்னம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன் கல்லூரியின் நூற்றாண்டு பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

⇨ 6

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


தென்கோவை கற்பகப் பிள்ளையார் கோவிலின் மூன்றாம் திருவிழா 01.06.2023 வியாழக்கிழமை கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினரின் உபயமாக இடம்பெற்றது.



## சர்வதேச யோகா தினம்

யாழ் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ் இந்திய கலாசார மண்டபத்தில் 21.06.2023 புதன் காலை 7 மணி முதல் 8 மணி வரை நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வுகளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த 65 ஆசிரிய மாணவர்களும் அதிபர் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் இந்திய துணை தூதுவர் கௌரவ ராகேஷ் நட்ராஜ் அவர்கள் கலாசாலையில் இருந்து பங்கு பற்றியோருக்கான. சான்றிதழ்களை அதிபரிடம் வழங்கி கௌரவித்தார்





# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කළා දිපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆசிரியக்கல்வி நிறுவனங்களுக்கு இடையே இணைப்பு வேண்டும்

இலங்கையில் ஆசிரியர் கல்வியை பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, ஆசிரிய மத்திய நிலையம், எனப் பல நிறுவனங்கள் வழங்குகின்றன.. இருப்பினும் இந்த ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு இடையே கல்வி குறித்து ஒத்த சிந்தனை இல்லாமை பெரும் குறையாக நோக்கப்படுகிறது. பல்கலைக்கழகம் தேசிய கல்வியல் கல்லூரி என இவர்கள் வழங்குகின்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடத்திட்டத்தில் கூட கணிசமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் பாட முன்னாயத்தத்திற்காக எழுதும் செயற்பாட்டு திட்டக் குறிப்பிலும் ஒருமைத்தன்மையை காணமுடிவது இல்லை.

இவற்றிற்கான பிரதான காரணம் ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமை என்பது பரம இரகசியமாகும். ஆசிரியர் கலாசாலை, தேசிய கல்வியியல் கல்லூரி இரண்டும் இணைந்து நாட்டில் பயணிப்பது ஆசிரியர் கல்வியினை வலுவுடையதாக்கும். இதனை வெளிப்படுத்தக் கூடிய ஒரு நிகழ்வாக கடந்த 27/6/2023 செவ்வாய்க்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து பங்குபற்றிய விளையாட்டு நிகழ்வை குறிப்பிடலாம்.

இரண்டு கல்லூரி நிர்வாகிகளும் தமது ஒற்றுமையின் அவசியத்தை வெளிப்படுத்தும் விதமாக முழுநாள் ஒட்டு மொத்த நிறுவன சமூகத்தையும் இணைத்து புரிந்துணர்வை வலுப்படுத்திக் கொண்டனர். இந்த இணைவு மேலும் வலுப்பெற வேண்டும் என்பதற்கு அப்பால் ஏனைய கலாசாலைகள் மற்றும் கல்லூரிகள் இதனை ஒரு முன்மாதிரியாக கொள்ள வேண்டும் இவ்வாறான நிகழ்வுகளுக்கு ஊக்கம் வழங்கும் வகையில் கல்வி அமைச்சு வழிகாட்டல்களை வழங்குவது அவசியமாகும். அதனைவிட இதற்கென நிதிசார் வளங்களை நல்குவதும் அமைச்சினுடைய தார்மீக கடமையாகும். இவை செவ்வனே இடம்பெறும்போது ஆசிரியர்கள் மத்தியிலே பல்இன பல்கலாசார உறவுகளுக்கு மதிப்பளிக்கின்ற போக்கும் சமூக அங்கீகாரமும் வலுப்பெறும்

.

போதைப் பாவனை உள்ளிட்ட பல பிரச்சனைகளுக்கு இந்த அங்கீகாரம் தீர்வாக அமையும். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து இந்த ஆண்டு முறை சார்ந்த விதத்தில் முன்னெடுத்த பெருவிளையாட்டு போட்டி நிகழ்வு நல்லதோர் ஆரம்பம்.

**அதிபர்**

## அமெரிக்க பேராசிரியர் கலாசாலையை பார்வையிட்டார்

அமெரிக்காவில் இருந்து வருகைதந்த சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணரும் பேராசிரியருமாகிய தவம் தம்பிப்பிள்ளை தனது யாழ்ப்பாண வருகையின் ஓரங்கமாக தனது தாயார் கல்வி கற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்தார்.

இதன்போது மாணவர்களுக்கான உள்ளக கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.





# News in Brief - Month of June

**06.06.2023**

**American professor visited the college**

Dr. Tavam Thambipillai, a kidney transplant surgeon and professor visiting from America, visited the Kopay Teachers' College where his mother got her teacher Training.

**07.06.2023**

**Wednesday Assembly**

It started at 8:30 am under the leadership of Principal Mr. S. Laleesan. The event was conducted by the students of Physical Education A course. The Keynote speaker was Mr. Muthu Rathakrishnan, Zonal Education Director, Jaffna Education Zone.

He retired on 22.06.2023 after completing 41 years of service. The college community congratulated him by presenting honorary memorandum.

He handed over a collection of his books which he had written and published. Mr. V. Senthan the in-charge lecturer of College Krishnai library received that books. Deputy Principal Mr. K. Senthilkumaran gave the introductory speech to the chief guest.

Physical Education A Teacher student Mrs. R. Lakshmi also performed. Certificates were given by the Maths Forum to the students who participated in the Maths Forum Teaching Learning Equipment Exhibition.

**14.06.2023**

**Wednesday's Assembly**

It started at 8:30 am under the leadership of Principal Mr. S. Laleesan The event was conducted by the students of Physical Education B course Mrs. Divya Ravivarman Physical Education B Teacher trainee coordinated and delivered the student programmes.

Mr. Sujeevan Executive member of noolagam Foundation gave a lot of informations about noolaham web site. Lecturer Mrs. Chandrika Tharmaratnam gave the introductory speech and the teacher student speech was given by Mr. Selvarasa Sansayan, student of Physical Education B

**14.06.2023**

**Laying of foundation stone for Centenary Memorial Place**

To mark the Centenary of Kopay Teachers' College A Centenary Memorial Place is to be built. The foundation - laying event was presided over by the Principal of the College Placed on 14. 06. 2023 at 9.30 am. Suvarna Navaratnam, a former lecturer and founder of Kopay Navamangai Nivasam, laid the foundation stone for the Memorial Place.

**16.06.2023**

The Centenary Inauguration Ceremony (1923 - 2023) of Kopay Teachers' College was held on 16.06.2023 in the morning under the patronage of Principal Mr. S. Laleesan. The Minister of Fisheries and The DCC Chairman of Jaffna and Kilinochchi District Hon. Douglas Devananda was participated as the chief guest. The Provincial Director of Education, Northern Province, Mr. John Quintus was participated as the special guest. The former principals of our College, Mr. V.K. Kanapathipillai Mr. V. Karunalingam Jaffna Zonal Director of Education Mr. Muthu Rathakrishnan and former Mayoress of Jaffna Mrs. Yogeswari Patkunarajah also graced the occasion.

**22.06.2023**

**Wednesday's Assembly**

It started at 8:30 am under the leadership of Principal Mr. S. Laleesan. The event was conducted by second year primary teacher trainees. Mrs. Issadeen Choupina, teacher trainee of second year primary coordinated the programmme.

The keynote speaker - Vana Rishi Thondunathan Swami He addressed the topic of Spirituality beyond religion in education.

Lecturer Ms. Dharshini Muthurajah delivered introductory speech about swami.

Mrs. Alanrose Strella, a second year primary teacher trainee, gave a speech on the yoga art.

Meanwhile, certificates were awarded to the teacher trainees who participated in the International Yoga Day events organized by the Jaffna Consulate General of India.

⇨ 11

# கலாசாலை நூற்றாண்டையொட்டி கல்லூரிகளுக்கிடையே சிறப்புற இடம்பெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகள்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டையொட்டி கலாசாலைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ விளையாட்டு போட்டி நிகழ்வு 27.06.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இரு கல்லூரிகளதும் உடலாளர் மன்ற ஏற்பாட்டில் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் ஆசிரிய கலாசாலை அதிபர் ச. லலீசன் ஆகியோரது இணைத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி செல்வி நி. நல்லையா கலாநிதி திருமதி ஜெ. தியாகலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக லயன் டாக்டர் வை. தியாகராஜா மற்றும் எங்கட புத்தகங்கள் புகழ் கு.வசீகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். விரிவுரையாளர்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டம், ஆசிரிய மாணவர்களுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் விரிவுரையாளர் கிரிக்கெட் மற்றும் மாணவர் கிரிக்கெட் உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் என்பவற்றில் கலாசாலை அணி வெற்றி பெற்றது. மாணவர் எல்லே போட்டியில் கல்வியியல் கல்லூரி அணி வெற்றி பெற்றது.










## நூற்றாண்டு நினைவிடத்திற்கான அத்திவாரமிடல்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்து முகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான அத்திவாரம் இடும் நிகழ்வு கலாசாலையின் அதிபர் தலைமையில் 14.6.2023 அன்று 9.30 மணிக்கு இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமாகிய சுவர்ணா நவரத்தினம் அவர்கள் நினைவிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார் இந்நினைவிடம் அவரது உபயமாக அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது.





**முதலாம் பக்க தொடர்ச்சி.......**

குறித்த நினைவுச் சின்னத்தை வடிவமைத்த கலாசாலையின் உடற்கல்வி ஆசிரிய மாணவி திருமதி ஸ்ரீசக்தி ரம்யராகுலன் கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு கலாசாலையின் ஆசிரிய மாணவர்களுக் கென வடிவமைக்கப்பட்ட டீ- சர்ட் அறிமுகம் செய்யப்பட்டதுடன் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினரும் சிறப்பு விருந்தினரும் கலாசாலை சமூகம் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேற்படி நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் முதல்வர்களான வே.கா கணபதிப்பிள்ளை வீ.கருணைலிங்கம் யாழ்ப்பாண கல்வி வலயப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் யாழ் மாநகரசபை முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர்கள் முன்னாள் விரிவுரையாளர்கள் மாணவ ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.




கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய பதிவு விக்கிப்பீடியாவில் தற்போது தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது கலாசாலையின் வரலாற்றில் முதல் மைல் கல்........

https://ta.m.wikipedia.org

# புதன் 07.06.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு முத்து இராதாகிருஷ்ணன் வலயக் கல்விப்பணிப்பானர் யாழ்ப்பாணம் கலந்து சிறப்பித்தார்

**ஆசிரியப் பணி என்பது பேரம் பேசுவதற்கான பணி அல்ல – ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலாசாலையில் ஆற்றிய உரை**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதன்கிழமை ஒன்று கூடலில் ஜூன் ஏழாம் திகதி சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட மணிவிழா நாயகன் யாழ் வலய கல்விப் பணிப்பாளர் திரு முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய உரையின் சாராம்சம்.

தனது நாற்பத்தொரு வருட கல்விப் பணியின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் அந்தப் பெட்டை குட்டிகள் என்ற அவரது சிறுகதை அரச தமிழ் பாடநூலில் இடம்பெற்றமை பற்றியும் எடுத்துக் கூறினார்.

ஆசிரியப் பணி என்பது வீரம் பேசுவதற்கானது அல்ல. மாணவர்களை நாம் உயர்த்துவதற்கானது. அவர்களிடம் நன்றியை எதிர்பார்க்காது நாம் செயற்படவேண்டும். பிள்ளைகள் தங்களது விடயங்களை தாங்களே கற்று அனுபவப்படுவதற்கான இடைவெளியை, சந்தர்ப்பங்களை தாங்களே வழங்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமையினாலேயே இன்றைய பல படித்த உயர்தர பல்கலைக்கழக மாணவர்கள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். பெறுபேறுகளை உயர்த்துவது அல்ல சமூகத்திற்குப் பெறுபேறானவர்களை உயர்த்தித் தருவதே கல்வியின் நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

அதிதி அறிமுக உரையினை பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் அவர்களும் ஆசிரிய மாணவர் உரையினை உடற்கல்வி A மாணவி திருமதி ர. லட்சுமி அவர்களும் ஆற்றினர்.

அத்துடன்

கணித மன்றத்தினால் நடாத்தப்பட்ட கற்பித்தல் உபகரண கண்காட்சி நிகழ்வில் பங்குபற்றி வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்ககளும் கணித மன்றத்தினால் வழங்கப்பட்டன.







# புதன் 14.06.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு தர்மரட்ணம் சுஜீவன் ~ ஆளுனர் சபை உறுப்பினர் நூலக நிறுவனம் கலந்து சிறப்பித்தார்

**எண்ணிம ஆவணப்படுத்தலில் நூலக நிறுவனத்தின் பங்களிப்புகள்**

எமது கலாசாலையின் புதன்கிழமை ஒன்று கூடல் வரிசையில் ஜூன் 14 ஆம் திகதி சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த திரு த. சுஜிவன் – சிறகுகள் அமையம் மற்றும் நூலக நிறுவன செயற்பாட்டாளர் அவர்கள் எண்ணிம ஆவணப்படுத்தல் என்ற தலைப்பில் திரைவழி காட்சிப்படுத்தலுடன் உரை நிகழ்த்தப்பட்டது.

ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் ஆவணப் படுத்தலின் தேவை நூலக நிறுவனம் பற்றிய அறிமுகம் எண்ணிம ஆவணப்படுத்தலில் நூலக நிறுவனத்தின் பங்களிப்புகள் கலாசாலைசார் ஆவணங்கள் கல்விசார் ஆவணப்படுத்தலில் இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள முயற்சிகள் ஆவணப் பணிகளில் எப்படி நாங்களும் பங்களிப்பு செய்யலாமென்ற விளக்கம் எனப்பல பயனுள்ள விடயங்கள் இவரால் வழங்கப்பட்டன. பயனுள்ள புதிய புதிய விடயங்களை நல்குவதாக அவரது உரை அமைந்திருந்தது.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் திருமதி சந்திரிகா தர்மரட்ணம் அவர்களும் ஆசிரிய மாணவர் உரையினை உடற்கல்வி B ஆசிரிய மாணவன் திரு செல்வராசா சன்சயன் அவர்களும் ஆற்றினர.

பின்வரும் மூன்று முகவரிகள் வழி நீங்களும் நூலக ஆவணங்களை பார்வையிட முடியும்.

noolagam.org
aavanaham.org
epallikoodam.org







# 22.06.2023 வாராந்த ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளராக ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கலந்து சிறப்பித்தார்

## கல்வியில் மதம் கடந்த ஆன்மீகமே தேவை

**நெஞ்சைத் தொட்ட ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிககளின் உரை.**

எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையிலும் சமூகத்தை கலாசாலையோடு ஒன்றிணைக்கும் வகையிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிகழ்வுத் தொடர் வரிசையில் கடந்த ஜூன் 22 ஆம் திகதி நடந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக அமெரிக்காவில் வசிக்கும் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாத சுவாமி அவர்கள் கலந்து கொண்டு அனைவரையும் சிந்திக்க வைக்கும் வகையில் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைவதாக கூறி தனது உரையை ஆரம்பித்த சுவாமி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புகழ் உலகம் எங்கும் பரவியுள்ள தன்மையை எடுத்துக் கூறியதுடன் கோப்பாய் கலாசாலையின் முன்னாள் ஆசிரிய மாணவர்கள் முற்காலத்தில் கோப்பாய் பிரதேச ஆலயங்களில் பிரசங்கங்கள் செய்தனர்.

எனது சமய, சமூகப் பணிகளை விட ஆசிரியப் பணியையே நான் அதிகம் நேசிக்கிறேன். அமெரிக்கா கல்வி முறையில் கல்வியாண்டு மே மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் முடிவடைகிறது. தொடர்ந்து வரும் மூன்று மாத விடுமுறையில் மாணவர்களின் கல்விக் குறைபாடுகள் பாசறை முறை மூலம் விருத்தி செய்யப்படும்.

நாங்கள் தனியே சமயவாதிகளாக மட்டும் இருப்பதில் பயனில்லை சமயவாதியாகவும் ஆன்மீக வாதியாகவும் இருக்கும்போதே எம் வாழ்வு முழுமை பெறுகிறது. இதனை எமது கல்வி முறை உருவாக்க வேண்டும். இருட்டை அகற்றுகின்ற குருவாக இருப்பவர்களுக்கு குணஇயல்பு, பேச்சு, செயல் என்பன சிறப்பானதாக அமைய வேண்டும் என்ற குர்ஆனில் முகமட் கூறிய கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்.

கிறிஸ்தவர்களின் பைபிளில் ஆசிரியர் பற்றி கூறப்பட்டுள்ள விடயங்களையும் கூறி உலகின் மிகச் மிகச் சிறந்த ஆசிரியர் – அதிகமானோரால் பின்பற்றப்படுகின்ற இயேசுநாதரே என்ற கருத்தையும் எடுத்துரைத்தார். .




அப்துல்கலாமிற்கு கற்பித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுப்பிரமணியம் என்ற ஆசிரியரைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

ஆசிரியத்துவம் என்பது சம்பளத்திற்கு செய்யும் ஒரு வேலை அல்ல. ஆசிரியர் பாகுபாடு பார்க்ககூடாது. நீதி தவறாதவராக இருக்கவேண்டும். இக்கருத்தை அவர் மனம் தொட்ட ஒரு கதை மூலம் விளக்கி ஆசிரியத்துவத்தின் மேன்மையை எடுத்துரைத்தார். திறந்த மனத்துடன் இருக்க வேண்டும். முற்கற்பிதங்களுடன் வாழ கூடாது சிறிய மாற்றங்கள் பெரியமாற்றங்களை ஏற்படுத்தும். பல்வேறு வகையான பயனுள்ள கருத்துக்களை கொண்ட உரையாக அவரது உரை அமைந்திருந்தது.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்களும், ஆசிரிய மாணவர் உரையினை யோகக் கலை என்ற பொருளில் இரண்டாம் வருட ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி திருமதி அலன்ரோஸ் ஸ்ரெல்லா அவர்களும்ஆற்றினர்.

இதேவேளை இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வுகளில் பங்கேற்ற கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இவற்றை வண. ரிஷி தொண்டுநாத சுவாமி, கலாசாலையின் அதிபர் மற்றும் பிரதி அதிபர்களான திரு. க.செந்தில்குமரன் திரு க. கோபாலகிருஷ்ணன் மற்றும் விரிவுரையாளர் திருமதி க. அன்பரசி ஆகியோர் வழங்கினர்.

# புதன் 28.06.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளராக வணபிதா S.J ஞானப்பொன்ராஜா, ஓய்வுநிலை அதிபர், சென் ஜோண்ஸ் கல்லூரி கலந்து சிறப்பித்தார்

## ஓய்வு பெற்ற அதிபர்களுக்குள்ளே நான் பேறுபெற்ற அதிபர்

எமது கலாசாலையில் 28 ஜூன் அன்று நடைபெற்ற புதன்கிழமை ஒன்று கூடலில் வணபிதா. N. J. ஞானப்பொன்ராஜா (முன்னாள் அதிபர் யாழ்ப்பாணம் சென் ஜோண்ஸ் கல்லூரி) Consultant, David Pieris Business Development Northern Province, முன்னாள் ஆசிரிய மாணவர் 85/86 கோப்பாய் ஆசிரிய கலாசாலை. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இருபத்தைந்து வயதில் தான் இக்கலாசாலையில் கற்ற நினைவுகளை மீட்டி உரையைத் தொடங்கிய அவர் ஆசிரியத்துவம் என்பது கடவுளுக்கு நிகரானது என்பதை மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதன் மூலம் விளக்கியதுடன் வைத்திய தொழிலோடு ஆசிரியத்துவத்தையும் ஒப்பிட்டு எமது உள்ளத்தை, ஆன்மாவை. சிந்தனையை ஆரோக்கியமாக்கும் ஒரு வைத்தியரே ஆசிரியர் எனக் கூறியதுடன் தனது சொந்த வாழ்வு அனுபவங்களிலிருந்தும் எடுத்துரைதத்தார்.

ஆசிரியர்களிடம் ஒரு எதிர்கால திட்டமிடல் இருத்தல் அவசியம் என எடுத்துக் கூறியதுடன் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற இணைப் பாடவிதான செயல்பாடுகளின் முக்கியத்துவத்தையும் இன்றைய சமகால கல்வியின் சூழலுடன் இணைத்து எடுத்துரைத்தார் தான் எப்படி இடர்பட்ட மாணவர்களை கையாண்டார் அவர்களுக்கு எப்படி உதவினார் என்ற அனுபவங்களை எடுத்துக் கூறியதுடன் இன்று ஓய்வு பெற்ற பின்னும் தான் ஒரு புகழ் பெற்ற வணிக நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசகராக இருப்பதற்கு தான் வளர்த்துக் கொண்ட அறிவும் மென் திறன்களுமே காரணம் என கூறினார்

யாழ்ப்பாணத்திற்குள்ளே ஓய்வு பெற்ற அதிபர்களுக் குள்ளே இத்தகைய பேறு தனக்கு மட்டுமே கிடைத்துள்ளது என்பதையும் கூறினார். முன்னதாக அவரது மாணவராகிய எமது கலாசாலை அதிபர் தன்னுடைய தமிழ் ஆசான் இன்றைய நிகழ்விற்கு வருகை தந்தமையினையிட்டு தான் பெருமை அடைகின்றேன் என்றும் ஒரு கலாசாலை ஆசிரிய மாணவர் நினைத்தால் தனது முயற்சியாலும் திறமையாலும் உயர் பதவிகளை அலங்கரிக்க முடியும் என்பதற்கு வணபிதா. N. J. ஞானப்பொன்ராஜா (ஒரு சிறந்த முன்னுதாரணம் என்றும் எடுத்துரைத்தார்

அதிதி அறிமுக உரையினை இரண்டாம் வருட ஆங்கிலநெறி மாணவி திருமதி இந்திராதேவி றொபேட் சசிதரன் அவர்களும், இரண்டாம் வருட ஆங்கிலக்கல்வி ஆசிரிய மாணவன் திரு இரவீந்திரராசா பிரதீபன் artificial intelligence என்னும் தலைப்பில் உரையாற்றினர்.







## நூற்றாண்டுவிழா ஆசிகள், செய்திகள்,செயற்பாடுகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
20 h ·

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அருளிய ஆசியுரை. 19.06.2023 (நன்றி கஜன்)






# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா

யாழ். விசேட நிருபர்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா (1923 - 2023) நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு நூற்றாண்டு விழாவை பிரகடனப்படுத்தி வைத்தார். நூற்றாண்டு நினைவு சின்[redacted]மும் அவரால் திரைநீக்கம் செய்து [redacted]வைக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக வடக்கு [redacted]மாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் [redacted]யின்ரஸ், இனிய விருந்தினராக [redacted]லாசாலை முன்னாள் அதிபர்களான [redacted]வ.கா. கணபதிப்பிள்ளை வீ. கரு[redacted]னலிங்கம் மற்றும் யாழ்ப்பாண [redacted]வலய கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1923 ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதன் வழங்கிய ஐந்து ஏக்கர் நிலத்தில் இந்த கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் கல்வி வரலாற்றில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இக்கலாசாலையின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

**தினகரன்—17.06.2023**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
2 d ·

கலாசாலை வெளிப்புற சூழலை தாமாகவே முன்வந்து அழகுபடுத்தும் கலாசாலை அயலில் வாழும் உள்ளங்களுக்கு நன்றி 18.06.2023



## *News in Brief*
## *Month of June con ........*

**27.06.2023**

**Special Inter-Collegiate Sports Competitions on the occasion of the College Centenary**

friendly sports match between the Kopay Teachers' College and the Jaffna National College of Education on the occasion of the centenary of Kopay Teachers' College started at the Kopay Teachers' College ground at 8.30 am on 27.06.2023 Tuesday. National College of Education President Mr S. Paramanandam, Kopay Teachers College Principal Mr S.Laeeson were co-chaired the occasion. The Jaffna Zonal Director of Education Mr P. Ravichandran participated as the Chief guest

The special guests were Dr (Ms) N.Nallaiya Dr (Mrs) J. Thiagalingam. Lion Dr. Y. Thiyagarajah participated as the guest of honour. *Engada puththakangal* reputation Mr K. Vaseekaran sponsored the event. Our Lecturer Mr B.Baskaran gave a special lunch for the participates.

**28.06.2023**

**Wednesday's Assembly**

It started at 8:30 am under the leadership of Principal Mr. S. Laleesan.

The event was conducted by second year English course. Ms. Acshal Vakeesan, coordinated the programme.

Rev S.Jameson Gnanaponrajah – Rtd. Principal St. Jones College, Consultant David Pieris Business Development Northern Province.

Mrs. Indradevi Robert Sasikaran, a second year English course teacher trainee gave an introductory speech and Mr. Ravendrarasa Prateepan, a second year English course teacher trainee, delivered the speech on the topic of artificial intelligence.



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்த ஒன்றுகூடல் நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசா நிகழ்வில் யாழ். சென். ஜோன்ஸ்

# நிகழ்வுகளின் தொகுப்பு

## நூற்றாண்டுவிழா தொடக்க நிகழ்வுகள்














**16.06.2023**

# புதன் காலை ஒன்றுகூடல் நிகழ்வுகளின் தொகுப்பு










**07.06.2023**

**14.06.2023**

# புதன் காலை ஒன்றுகூடல் நிகழ்வுகளின் தொகுப்பு

















**22.06.2023**

**28.06.2023**